# மே - 22 - திங்கள்

**புனித ரீட்டா காசியா**

**அல்லேலூயா! ஆண்டவருக்குப் புதியதொரு பாடலைப் பாடுங்கள்: திபா. 149:1**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 16 : 11 – 15

பவுல், சீலா, திமோத்தேயு, லூக்கா ஆகிய நாங்கள் துரோவாவிலிருந்து கப்பலேறிச் சமொத்திராக்கு தீவுக்கும், மறுநாள் நெயாப்பொலி நகருக்கும் நேராகச் சென்றோம். அங்கிருந்து மாசிதோனியப் பகுதியின் முக்கிய நகரான பிலிப்பி சென்றோம். அது உரோமையரின் குடியேற்ற நகரம். அந்நகரில் சிலநாள்கள் தங்கியிருந்தோம். ஓய்வுநாளன்று நாங்கள் நகர வாயிலுக்கு வெளியே வந்து ஆற்றங்கரைக்குச் சென்றோம். அங்கு இறைவேண்டல் செய்யும் இடம் ஏதேனும் இருக்கும் என்று எண்ணி அமர்ந்து, அங்கே கூடியிருந்த பெண்களோடு பேசினோம். அங்குத் தியத்திரா நகரைச் சேர்ந்த பெண் ஒருவர் நாங்கள் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவர் பெயர் லீதியா. செந்நிற ஆடைகளை விற்பவரான அவர் கடவுளை வழிபட்டுவந்தார். பவுல் பேசியதை ஏற்றுக்கொள்ளுமாறு ஆண்டவர் அவர் உள்ளத்தைத் திறந்தார். அவரும் அவர் வீட்டாரும் திருமுழுக்குப் பெற்றனர். அதன்பின் அவர் எங்களிடம், ”நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டவள் என்று நீங்கள் கருதினால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்” என்று கெஞ்சிக் கேட்டு எங்களை இணங்க வைத்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மக்கள் மீது விருப்பம் கொள்கிறார்

## நற்செய்தி : யோவான் 15 : 26 – 16 : 4

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, “தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப்பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்கமுதல் என்னோடு இருந்துவருகிறீர்கள். ”நீங்கள் நம்பிக்கை இழந்துவிடாதிருக்க இவற்றையெல்லாம் உங்களிடம் சொன்னேன். உங்களைத் தொழுகைக்கூடத்திலிருந்து விலக்கி வைப்பார்கள். உங்களைக் கொல்லுவோர் கடவுளுக்குத் திருப்பணி செய்வதாக எண்ணும் காலமும் வருகிறது. தந்தையையும் என்னையும் அவர்கள் அறியாமல் இருப்பதால்தான் இவ்வாறு செய்வார்கள். இவை நிகழும் நேரம் வரும்போது நான் உங்களுக்கு இவைபற்றி முன்பே சொன்னதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இதற்காகவே இவற்றை உங்களிடம் கூறினேன். ”தொடக்கத்திலேயே நான் இவற்றை உங்களிடம் சொல்லவில்லை ஏனெனில் நான் உங்களோடு இருந்தேன்“ என்றார்.

**தியானம்:** மனமாற்றத்தினால் ஒரு மனிதனின் வாழ்வு புதுப்படைப்பாக மாறுகின்றது. இவற்றின் மூலமாக நாம் செய்யும் செயல்கள் வாயில் வரும் வார்த்தைகள் இவை யாவும் இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கும். அப்போதுதான் எமது உள்ளமாகிய ஆலயத்தில் அவர் வந்து தங்குவார். அதற்கு எங்களைத் தயார் படுத்த வேண்டுமென்று இன்றைய தியான வாசகங்கள் கூறுகின்றது. வரி தண்டுவோராகிய சக்கேயு, இயேசுவை பார்க்க விரும்பி மரத்தின்மேல் ஏறினார். அவரது உள்ளத்தை அறிந்த இயேசு சக்கேயுவே இறங்கி வா இன்று உன் வீட்டில் நான் தங்கவேண்டும் என்று கூறுகின்றார். இன்றைய முதல் வாசகத்திலும் கூட லிதியா என்ற பெண்ணை ஆண்டவர் இயேசு அவர் உள்ளத்தில் பேசி மனமாறி அவரும் அவரது குடும்பத்தாரும் திருமுழுக்குப் பெற்றனர்.(தி.ப.16:15) ஆனால் நாங்களோ திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் மூலம் தூய ஆவியைப் பெற்றுக்கொண்டுள்ளோம். ஆனால் எமது உள்ளமோ பாவம் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. அவற்றின் மூலம் நாங்கள் இறைவனை விட்டு விலகியே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அவ்வாறு வாழ்வதால் இயேசு எவ்வாறு எம் உள்ளத்தில் வந்து தங்குவார். நாங்கள் என்ன செய்ய வேண்டும் எவ்வாறு எமது வாழ்வை மாற்றியமைக்க வேண்டும் என்தற்காக இயேசு எங்கே இருக்கின்றார்? அவரை நாங்கள் எப்படி சந்திப்போம்? என்ற ஏக்கத்தோடு அன்று சக்கேயு இயேசுவைக் காண மரத்தின் மேல் ஏறி மனமாற்றம் பெற்றவனாக இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டாரோ, அதேபோல் ஏற்றுக் கொள்ள எங்களைத் தயார் படுத்துவோம்.